

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் BSV1 இரண்டு புதிய புறநகர் பேருந்து சேவை மற்றும் ஒரு புதிய குளிர் சாதன பேருந்து சேவையை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழாவையொட்டி, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருச்சி தஞ்சை சாலை காட்டூரில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் உருவச் சிலைக்கு திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கழக நிர்வாகிகளுடன் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.
இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், மாநிலங்கள் அவை உறுப்பினர் கவிஞர் சல்மா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், சபியுல்லா, செந்தில், பகுதிக் கழகச் செயலாளர் நீலமேகம், மாநில, மாவட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.6.05 கோடியில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், செப். 18 -

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட லாடபுரம் மற்றும் மேலப்புலியூர் ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி, தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட லாடபுரம் பகுதியில் ரூ.6.05 கோடி மதிப்பீட்டில் 4 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மேலப்புலியூரில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :-

மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை வழங்குவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அவற்றின் நிறைவேற்றித் தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு திட்டங்களின் மூலம் பல்வேறு மக்கள் நலத்திட்ட பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்று லாடபுரம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.43 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, அயோத்திதாசர் திட்டத்தின் கீழ் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, ரூ.5 கோடி மதிப்பீட்டில் லாடபுரம் பிரிவு சாலை மேம்பாடு மற்றும் பாலம் கட்டும் பணி என மொத்தம் ரூ.5.98 கோடி மதிப்பீட்டில் 4 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் துரிதமாக மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேலப்புலியூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. மக்களின் நலன் கருதி செயல்படுத்தும் திட்டங்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். இராஜ்குமார், வட்டாட்சியர் பாலசுப்ரமணியன்,

மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் செ.நல்லதம்பி, தி.மதியழகன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம். ரெங்கராஜ்,

கிளைக் கழக நிர்வாகிகள் ஜெய்குமார், பிரபு, பிச்சைப்பிள்ளை, தங்கமணி, கணேசன், மூலக்காடு பெரியசாமி, எல்.சி.குமார், துரை, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேந்திரன் மற்றும் வெ.கருணாநிதி லாடபுரம் செம்புலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா 117வது பிறந்தநாள் விழா!

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுதியேற்பு நிகழ்ச்சி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது!

உதகை, செப். 18 -

அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலய முகப்பிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு நிகழ்ச்சிக்கு தலைமையேற்று கழக கொடியேற்றி வைத்தார். மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்றார்.

தேர்தல் பணிக்குழு செயலாளர் அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மலர்தூவி மாரியதை செலுத்தினார். உதகை கிழக்கு நகர செயலாளர் ஜார்ஜ் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார்.

மாவட்ட கழக அவை தலைவர் போஜன், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, உதகை மேற்கு நகர செயலாளர் ரமேஷ், தலைமை கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வீரபத்திரன், வாணீஸ்வரி, காளிதாசன், உதகை நகர அவை தலைவர் ஜெயகோபி, துணை செயலாளர்கள் ரீட்டா, கிருஷ்ணன், இச்சுபாய், பொருளாளர் அனில்குமார்,

மாவட்ட அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், ராஜா, காந்தல் ரவி, ரஹமத்துல்லா, விவேகானந்தன், நாகராஜ், உதகை நகரமன்ற உறுப்பினர்கள் விஷ்னு, கஜேந்திரன், ரகுபதி, செல்வராஜ், கீதா, மேரி புளோரீனா, பிரியா, திவ்யா, மீனா, வனிதா, அனிதா லட்சுமி, புளோரீனா, தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் நாகராஜ், விஜயகுமார், மேத்யூஸ், மார்க்கெட் ரவி, மஞ்சுகுமார், ஆட்டோ ராஜன், ராஜ்குமார், ஆட்டோ பாபு, சித்திக், உதகை நகர இளைஞர் அணி நிர்வாகிகள் ரியாஸ், மத்தீன், ஆகாஷ், யாசர் உட்பட கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னணியினர் திரளாக கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்டத்தில் அண்ணா பிறந்த நாள் விழா! உறுதிமொழி ஏற்பு!

நாகை, செப்.18-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நாகையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் உள்ள அண்ணா சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள். நாகை நகர தி.மு.க. சார்பில் நாகை பாரதி மார்கெட் அருகே உள்ள அண்ணா சிலைக்கு நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து முன்னிலையிலும், நாகை வடக்கு ஒன்றியம் புத்தூரில் உள்ள அண்ணா சிலைக்கு நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த் முன்னிலையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சிகளில் மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் ஆர்.அருள் செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், கழக வழக்கறிஞர் அணி மு.தினேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், கேஸ்வி.செந்தில், சுரேந்தர், பெ.முருகானந்தம், பாலமுரளி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, குலோத்துங்கன், வெற்றிவேல், தமயந்தி, முருகானந்தம், எஸ்.பால்ராஜ், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் இரா.தங்கதுரை, தொழிலாளர் அணி தலைவர் எஸ்.என்.மோகன்தாஸ்,

மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கே.பிரதீப், நிஜாம், கலையரசன், எஸ்.சுரேஷ், ஆர்.கார்த்தி, கே.கரிகாலன், எம்.மணிமாறன், ஏ.ஷாஜகான், விமல் மொக்கை, கேப்ஸ்ரவி, நாகை நகர நிர்வாகிகள் வெற்றிலைகடைசிவா, பி.திலகர், சித்திரா குலோத்துங்கன், ரமணி, அபுபக்கர், நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். எஸ்.சத்தியன், நாகை வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் பாண்டியன், பாஸ்கரன், முத்துராமன், வேணுகோபால், ஜமால், எஸ். என்.ராமச்சந்திரன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.வினோத் மற்றும் ஒன்றிய, நகர, வார்டு, கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கலந்து கொண்டனர்.

கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வடக்காலத்தூரில் உள்ள படிப்பத்தில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கீழையூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியச் செயலாளர் ஆ. தாமஸ் ஆல்வா எடிசன் தலைமையிலும், கீழையூர் மேற்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் தலைமையிலும், நாகை தெற்கு ஒன்றியத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், ஒன்றியச் செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையிலும், திருமருகல் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய அவைத்தலைவர் ப. செல்வம், ஒன்றியச் செயலாளர் செல்வ.செங்குட்டுவன், மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர். மணிவண்ணன் தலைமையிலும்,

திருமருகல் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமையிலும், வேதாரண்யம் கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் என்.சதாசிவம் தலைமையிலும், வேதாரண்யம் மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் உதயம் வே.முருகையன் தலைமையிலும் வேதாரண்யம் நரகத்தில் நகர கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவர் மா.மீ. புகழேந்தி தலைமையிலும், தலைஞாயிறு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் மகா.குமார் தலைமை யிலும், நாகூரில் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார் தலைமையிலும், கீழ்வேளூரில் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம், தலைமையிலும், வேளாங்கண்ணியில் பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் தலைமையிம், திட்டச்சேரியில் முகமது சுல்தான் தலைமையிம், தலைஞாயிறில் சி. சுப்பரமணியன் தலைமையிலும் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்தப்பட்டு தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்ற உறுதிமொழி எடுத்து கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டம் தூக்கநாயக்கன்பாளையம், வடக்கு ஒன்றியம், கள்ளிப்பட்டி கலைஞர் திடலில் அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படதிற்கும், தூக்கநாயக்கன்பாளையத்தில் உள்ள அறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கும் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்திவிட்டு ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள 1 கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தினரும் சேர்ந்து தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம் என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். மேலும் கொண்டையம்பாளையம் துப்புரவு பணியாளர்களுக்கும், வாணிபுத்தூர் பேருர் கழக துப்புரவு பணியாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். நிகழ்வில் அந்தியூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் சி.காசி, டி.என்.பாளையம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவாகளின் பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் கடைத் தெருவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் மாலை அணிவித்து தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோன் என்ற உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடன் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.விஜயபாலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழக் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன் மற்றும் பலர் உள்ளனர்.